9–35 மணி.

செய்யக் கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்கிறது. ஆகவே, இது ஒரு சோஷியல் வெல்பேர் என்ற முறையில் இதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, திரு. ரமணி அவர்களுக்கு மின்சார இலாகாவினுடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி நன்கு தெரியும். ஆக, நிலைமைகள் முதலில் நன்கு சீர்படட்டும்; மின்சார இலாகா கடனிலிருந்து மீண்டு தன் காலில் நிற்கட்டும்; அரசினுடைய நிதிநிலையை எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிற நிலை மாறட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி சொன்ன கருத்துக்களை அரசு அப்போது பரிசீலிக்கும்.

வவ்வால் துறை அணைக்கட்டு கட்டும் திட்டம்.

*9309 திரு. எல். மூக்கையா:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியகுளம் தொகுதியில், கும்பக்கரை அருவிக்கு மேல் வவ்வால் துறை அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(அ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் கும்பக்கரைக்கு மேல் பாம் ஆற்றில் வவ்வால்துறை அணைக்கட்டு கட்டுவதற்காக திட்டம் தற்சமயம் பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. ஆய்வுக்குப் பின் திட்ட அறிக்கை கிடைத்து அரசு அதுபற்றி முடிவெடுக்கும்.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலையிலிருந்து வற்றாத ஜீவநதியாக பாம்பாறு நதி, கும்பக்கரை அருவி வழியாக ஓடி வீணாகிக் கொண்டிருக்கிறது. பெரியகுளம் தொகுதி மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கை வவ்வால்துறை அணைத்திட்டம். அந்தப் பகுதி விவசாயத்தையே நம்பிக்கொண்டு இருக்கிற பகுதி. கிணற்றுப் பாசனம் அதிகமாக இருக்கின்ற பகுதி. ஆகவே, அரசு அந்த கும்பக்கரைக்கு மேல் வவ்வால் துறை அணைத் திட்டத்தைத் துரிதமாகக் கட்டிக் கொடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்த அணையைக் கட்டுவதற்கு அரய நினைத்துத்தான் அதை ஆய்வு செய்யச் சொல்லி இருக்கிறது. ஆய்வினுடைய முதல் அறிக்கையிலே அணை கட்டுவதற்கு ஏதுவான இடம் என்று தெரிய வந்து இருக்கிறது. மேற்கொண்டும் அந்த அணை குறித்து பல்வேறு ஆய்வுகள் நடத்த வேண்டி இருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கை கிடைத்த பிறகு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப் பட்டு, அதற்குப் பிறகு அரசு அந்த அணையை எடுத்துக்கொள் வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துதல்.

*8012—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டப் பணி யாளர்களை நிரந்தரப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் தற்காலிகமான திட்டம். எனவே, பணியாளர்களை நிரந்தரப் படுத்த இயலாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டப் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று கூறுகிறார்கள். இது கிராமப்புறங்களில் பெண்கள், ஊட்டச்சத்தை ஏழை எளிய மக்களுக்கு முறையாக விநியோகித்துக்கொண்டு வருகிற துறை. அவர்களை நிரந்தரப்படுத்தினால்தான் அவர்கள் வாழ்வும் சிறப்பாக அமையும். ஆகவே பெண்களுக்கு எத்தனையோ சலுகைகளைச் செய்துகொண்டு இருக்கக்கூடிய அரசு அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு இனிமேலாவது யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை எதுவும் அரசின் பரிசீலனை யில் தற்போது இல்லை.